DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.27

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. முத்துப்பாண்டி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 14th day of November, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 09.11.2021 ம் தேதி எம்.புதுப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 166/2021 பிரிவு 302, 201 of IPC ன்படி பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் திலகராணி அவர்கள் முதல் கட்ட விசாரணை முடித்து எனது பார்வைக்கு வைத்திருந்த வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் மேற்படி முதலில் விசாரணை செய்த ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் வரைபடத்துடன் சம்பவ இடம் ஒத்துப்போனதால் நான் தனியே பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை.

பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் நாகராஜ், முருகன், கற்பகவள்ளி, நாடதன்னாசி, முத்துக்குமார், பால்ராஜ், செல்வி.பாண்டீஸ்வரி, நீராறு,

காளியம்மாள், சங்கர், கருணாகரண், வசந்தகுமார், சங்கிலிமாயன், பாண்டி, புவனேஷ்வரன், ராஜேஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் அன்றைய தினமே 14.00 மணிக்கு வழக்கின் எதிரி மாரிமுத்து என்பவரை எரிச்சநத்தம், பர்மா காலனி இபி அலுவலகம் அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் மனோகரன், மற்றும் உதவியாளர் மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் 14.15 மணிக்கு அதே இடத்தில் வைத்து எதிரியை விசாரிக்க அவர் எவ்வித வற்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாகுமூலத்தின் அடிப்படையில் எதிரியை அழைத்து சென்றதில் 16.00 மணிக்கு அவர் சம்பவ இடத்தினை என்னிடம் அடையாளம் காட்டினார். பின்னர் 16.45 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன செல்வகணேஷ் என்பவரின் செல்போனை எரிச்சநத்தம் கம்மாய் தண்ணீரில் எதிரி போட்டதை தெரிவித்ததின் அடிப்படையில் கம்மாய்க்கு சென்று அதே சாட்சிகள் முன்னிலையிலும், மற்றும் சாட்சி கேத்தையா மூலம் தேடிப்பார்த்ததில் தண்ணீர் கம்மாயில் அதிகமாக இருந்ததால் எதிரி போட்ட செல்வகணேஷின் செல்போனை கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் 17.30 மணிக்கு எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த இரத்தம்பட்ட புரவுன், கிரீம் கலர் கலந்த டவுசரை எதிரி அழைத்து சென்று குமிலங்குளம் விலக்கு கோழிக்கடைக்கு பின்புறம் இருந்து எடுத்து ஆஜர் படுத்தியதை அதே சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் 19.30 மணிக்கு எதிரியை அழைத்துக்கொண்டு அவர் திருமணம் செய்த வளையங்குளம் சென்று அவரது மனைவி வீட்டின் முன்பு எதிரி சம்பவத்தின் போது உடுத்தியிருந்த சந்தனக்கலரில் வெள்ளை கோடு போட்ட புளூ ஸ்டார்

எழுதப்பட்ட அரைக்கை சட்டை (இரத்தக்கறை படிந்தது. துவைக்கப்பட்டிருந்தது. ) மற்றும் காவிக்கலர் வேஷ்டி ஒன்று (இரத்தக்கறை படிந்தது. துவைக்கப்பட்டிருந்தது. ) ஆகியவற்றை அத்தாட்சியின்பேரில் கைப்பற்றினேன்.

பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் 21.30 மணிக்கு நிலையம் வந்து எதிரியை பாராவசம் ஒப்படைத்தேன். பின்னர் சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர். சாட்சி குமார் என்ற காஜாகுமார், கேத்தையா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் 10.11.2021ம் தேதி எதிரியை நீதிமன்ற காவலுக்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் நாகராஜ், முருகன், கற்பகவள்ளி, நாடதன்னாசி, பாண்டீஸ்வரி, நீராறு, காளியம்மாள், மாரிச்சாமி, மகேஷ்வரி ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் 20.11.2021ம் தேதி இறந்த செல்வகணேஷின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த விருதுநகர் மருத்துவக்கல்லூரி மருத்துவர்கள் வெங்கடேச பிரசன்னா, மற்றும் பிரபு பிரசன்னா ஆகியோர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் 09.12.2021 ம் தேதி இவ்வழக்கின் தடய சொத்துக்களான பாதி எரிந்த நிலையில் காலரில் SB Zone என்று எழுதப்பட்ட இரத்தக்கறை படிந்த சந்தனக்கலர் சட்டை –1, பாதி எரிந்த நிலையில் சிமிண்ட் கலர், கருப்பு கலர் கலந்த பிளே பாய் என்று எழுதப்பட்ட இரத்தக்கறை படிந்த பனியன்,–1, பாதி எரிந்த நிலையில் கருப்பு கலர் மற்றும் வெள்ளை நிற பார்டர் போட்ட இரத்தக்கறை படிந்த வேஷ்டி –1, பாதி எரிந்த நிலையில் இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் டவுசர் –1 ஆகியவற்றை முதல் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதையும், மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் கைப்பற்றிய சொத்துக்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல்

ஆய்வகத்திற்கு பகுப்பாய்வு செய்யவேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். **பாதி எரிந்த நிலையில் காலரில் SB Zone என்று எழுதப்பட்ட இரத்தக்கறை படிந்த சந்தனக்கலர் சட்டை –1 சா.பொ.10, பாதி எரிந்த நிலையில் சிமிண்ட் கலர், கருப்பு கலர் கலந்த பிளே பாய் என்று எழுதப்பட்ட இரத்தக்கறை படிந்த பனியன்,–1 சா.பொ.11, பாதி எரிந்த நிலையில் கருப்பு கலர் மற்றும் வெள்ளை நிற பார்டர் போட்ட இரத்தக்கறை படிந்த வேஷ்டி –1 சா.பொ.12, பாதி எரிந்த நிலையில் இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் டவுசர் –1 –சா.பொ.13** ஆகும். பின்னர் 16.12.2021ம் தேதி சாட்சிகள் பெ.த.கா. 539 லதா, காவலர்கள் ராஜேஷ், வினோத் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் 27.01.2022ம் தேதி தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்த இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் சுப்புலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் கருணாகரன், புவனேஷ்வரன், ராஜேஷ் ஆகியோர்கள் என்னிடம் வழக்கு தொடர்பாக கூறிய விசயங்களை மட்டுமே வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

பின்னர் கடந்த 30.01.2022ம் தேதி இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 302, 201 ன்கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

புகார் மனுவில் புகார் தாரர் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துவிட்டு அவர்களும் வந்தபின்னர் பார்த்துவிட்டு அதன்பின்னர் புகார் கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் புகார் மனுவில் புகார்தாரர் எனது அண்ணனை யாரோ மர்மநபர்கள் அடித்து கொலைசெய்தவர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டி என்று புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் எனது அண்ணனுக்கு

பெண் பார்த்த வகையில் ஏதேனும் பிரச்சனை இருக்கலாம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் புகாரில் அவரது அண்ணன் W. புதுப்பட்டி, கிறிஷ்டியான்பேட்டைக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

இறந்துபோன செல்வகணேஷை முதலில் கொண்டு சென்றது அவரது தகப்பனார் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேட்டில் யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா 1 நாகராஜ் எனது விசாரணையில் எனது மாமா நாடதன்னாசி தன்னிடம் எதிரியும், இறந்த தனது அண்ணனும் ஒன்றாக இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், அதனை தான் பார்த்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் கேள்விப்பட்டதாக தெரிவித்துள்ளார். அவ்வாறு யார் மூலமாக கேள்விப்பட்டார் என்பதை எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

அசா 2 கற்பகவள்ளி எனது விசாரணையில் அசா 1 நாகராஜ் அசா 2 யிடம் எதிரியும் இறந்த செல்வகணேசும் ஒன்றாக வண்டியில் சென்றதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. ஆனால் மருமகன் நாடாதன்னாசி சொன்னதாக சொல்லியுள்ளார்.

அசா 3 நாடாதன்னாசி எனது விசாரணையில் எதிரியும் இறந்த செல்வகணேசும் ஒன்றாக வண்டியில் சென்றதை தான் பார்த்ததாகவும் அதனை அசா 1 மற்றும் அசா 2 யிடம் கூறியதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. நாடாதன்னாசியை நான் 09.11.2021ம் தேதி விசாரித்துள்ள நிலையில் மேற்படி நபரின் வாக்குமூலம் நீதிமன்றத்தில் 09.02.2022 ம் தேதி பெறப்பட்டுள்ளதாக நீதிமன்ற முத்திரை உள்ளது என்றால் சரிதான். அதற்கான காரணம் நாடதன்னாசியின் வாக்குமூலம் நீதிமன்றத்தில் பெறப்பட்ட இரண்டு தினங்களுக்கு முன்பாக என்னால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாடதன்னாசி எனது

விசாரணையில் குமிலங்குளம் விலக்கு அருகே ஆட்டோ ஓட்டுநர் முத்துக்குமார் அந்த வழியாக வந்ததை தான் பார்த்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. நாடதன்னாசி எனது விசாரணையில் எதிரியை யார் என்று செல்வகணேசிடம் கேட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. ஆனால் பாண்டீஸ்வரியின் மாமாவுடன் சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

அசா 4 பாண்டீஸ்வரி எனது விசாரணையில் என்னை ஆஜர் எதிரிக்கு பெண் கேட்டார் என்றும் , தனக்கு 13 வயது மட்டுமே நிரம்பியிருந்ததால் எங்கள் வீட்டில் பெண் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. 17 வயது நிரம்பியுள்ளது என்று மட்டும் சொல்லியுள்ளார். அதேபோல் பாண்டீஸ்வரி எனது விசாரணையில் மேற்படி திருமணத்திற்கு தான் மறுத்துவிட்டதாக சொல்லியுள்ளாரா என்றால சொல்லவில்லை. பெற்றோர்கள் மறுத்துவிட்டதாக சொல்லியுள்ளார். பாண்டீஸ்வரி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தனது தம்பி மகன் முனியாண்டி என்பவரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை.

இறந்துபோன செல்வகணேஷ் கோட்டையூரில் உள்ள பெட்ரோல் பல்க்கில் பெட்ரோல் போட்ட விபரம் செல்வகணேஷ் சொல்லிதான் தனக்குத் தெரியும் என்று பாண்டீஸ்வரி சொல்லியுள்ள விபரம் எனது விசாரணையில் துலங்கியுள்ளதா என்றால் இல்லை.

பாண்டீஸ்வரி எனது விசாரணையில் செல்வகணேஷ்ற்கு தான் போன் செய்தபோது பாண்டீஸ்வரியின் மாமா மாரிமுத்துவுடன் தான் சென்றுகொண்டிருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் புகார் மனு கொடுக்கப்படும் வரையிலும் செல்வகணேஷ் இறந்தது சம்பந்தமாக எங்கள் காவல் நிலையத்தில் ஏதேனும் தகவல் கிடைக்கப்பெற்றதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

அசா 8 முத்துக்குமாரை நான் 09.11.2021 அன்று விசாரித்தேன் என்றால்

சரிதான். அவரது வாக்குமூலம் நீதிமன்றத்தில் 09.02.2022 அன்று பெறப்பட்டதாக நீதிமன்ற முத்திரை உள்ளது என்றால் சரிதான். அதற்கான காரணம் முத்துக்குமாரின் வாக்குமூலம் நீதிமன்றத்தில் பெறப்பட்ட இரண்டு தினங்களுக்கு முன்பாக என்னால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முத்துக்குமார் எனது விசாரணையில் செல்வகணேஷ் தனது வண்டியில் இன்னொரு ஆளை உட்கார வைத்துக்கொண்டு சென்றதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், அவ்வாறு அமர்ந்திருந்த நபரின் அங்க அடையாளங்கள், உருவ அமைப்பு , ஆடைகளின் நிறம் எதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் எனது விசாரணையில் வழக்கின் எதிரி செல்வகணேசுடன் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் எனது விசாரணையில் தான் செல்வகணேஷை நிறுத்தி என்ன தம்பி இங்கு தூரமா என்று கேட்டதாகவும், அதற்கு செல்வகணேஷ் தனக்கு நிச்சயமான பெண் வீட்டிற்கு சென்றுவருவதாக கூறியதாகவும் எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரியை கைது செய்தபின்பு அவரை அடையாளம் காட்டுவதற்காக முத்துக்குமாரை அழைத்து சென்று அடையாள அணிவகுப்பு ஏதேனும் நடத்தினேனா என்றால் நடத்தவில்லை. அசா 15 காஜாகுமார் முன்னிலையில் எந்த ஒரு இரத்தம்பட்ட டவுசரை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

எதிரி மாரிமுத்து என்னிடம் வழங்கியதாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் இட்ட சாட்சிகளை எதிரியை கைது செய்வதற்கு முன்பே உடன் அழைத்து சென்றதாக சொல்லப்பட்டுள்ளது வழக்கிற்காக பொய்யாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசா 17 எதிரியை கைது செய்ய சென்றபோது அவரது உதவியாளருடன் என்னுடன் வரவேயில்லை என்றால் சரியல்ல.

நான் தயார் செய்த அசாஆ 6 அத்தாட்சியில் 3 வது காலத்தில் தேதி

ஏற்கனவே எழுதப்பட்டு அது மீண்டும் மாற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் 19 என்று தேதி எழுதப்பட்டு அது திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கருப்பு கலர் இரத்தக்கறை படிந்த டவுசரை கைப்பற்றியதாக சொல்லப்படும் இடமான காஜாகுமாரின் கடைக்கு பின்புறம் உள்ள பகுதி தடை செய்யப்பட்ட பகுதி அல்ல என்றால் சரிதான். வெட்டவெளியான காலியிடம் என்றால் சரியல்ல. முட்புதர்கள் மண்டிய இடமாகும். கருப்பு கலர் இரத்தக்கறை படிந்த எதிரியின் டவுசரையையும் வேஷ்டி சட்டையையும் கைப்பற்றியதாக சொல்லப்படும்போது அந்த இடத்தில் வைத்து அவை சீல் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இரத்தக்கறை படிந்த உடைகள் இறந்துபோன செல்வகணேஷின் டிஎன்ஏ வுடன் ஒத்துப்போகின்றதா என்பதை அறிய ஆய்வுக்கு உட்படுத்தினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் கல்லை ஆய்வுக்கு உட்படுத்தினேனா என்றால் இல்லை. பகுப்பாய்விற்கு உட்படுத்தினேன். மேற்படி கல்லை இறந்துபோன செல்வகணேஷின் இரத்தத்துடன் ஒத்துப்போகின்றதா என்று டிஎன்ஏ பரிசோதனைக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. டிஎன்ஏ பரிசோதனைக்கு உட்படுத்தினால இந்த வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

அசா 18 பாண்டியன் என்பவரிடம் எதிரியின் புகைப்படத்தை காட்டி விசாரித்ததாக கூறியுள்ள நிலையில் அந்த புகைப்படம் எப்போது யாரால் எடுக்கப்பட்டது என்ற விபரத்தை துலங்கியுள்ளேனா என்றால் இல்லை. அசா 18 யிடம் இறந்த நபரின் புகைப்படத்தை காட்டி விசாரித்தேனா என்றால் இல்லை. பெட்ரோல் பல்க்கில் சிசிடிவி இருந்ததாக சொல்லப்படுவது உண்மையா என்றால் உண்மைதான். மேற்படி சிசிடிவியில் இருந்த பதிவுகளை நான் எடுத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேனா என்றால் பெட்ரோல் பல்க்கின் உரிமையாளர் hard disk யை ஒப்படைக்க மறுத்த காரணத்தால் என்னால் ஒப்படைக்க

முடியவில்லை. அவ்வாறு உண்மையாக பெட்ரோல் பல்க்கின் உரிமையாளர் ஒப்படைக்க மறுத்தார் என்பதை நான் எனது குற்ற இறுதியறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. உண்மையில் சிசிடிவி பதிவுகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்பட்சத்தில் இந்த வழக்கினை பாதிக்கும் என்பதால் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

செல்வகணேஷை எரிப்பதற்கு எதிரி தீப்பெட்டியை பயன்படுத்தினாரா அல்லது வேறு தீப்பந்தம் போன்ற எதையும் பயன்படுத்தினாரா என்று நான் துலங்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் ஒப்புதல் வாககுமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த சான்று பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. மருத்துவரிடம் வழக்கின் சான்று பொருளாக காட்டப்பட்ட கல்லை காட்டி அதனால் இறந்தவர் காயம்பட்டு இறப்பதற்கு வாய்ப்புள்ளதா என்று கருத்துரை எதுவும் கேட்டு பெறவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.